பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

19 11 2025 WEDNESDAY 6 45 AM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, கோவையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 21வது தவணைத் தொகையை விடுவிக்கவுள்ளார்.

2. சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது பிறந்த நாளையொட்டி, தேசிய அளவிலான பாதயாத்திரை நடத்தப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

3. திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாவை ஒட்டி, சிறப்பு பேருந்துகள் மற்றும் சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளதாக மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

4. விவசாயிகளுக்கான தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. வளர்ந்து வரும் இளம் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஓமன் அணியை வென்றது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, கோவையில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 21வது தவணைத் தொகையை விடுவிக்கவுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், நாடுமுழுவதும் உள்ள சுமார் 9 கோடிக்கும் அதிகமான விவசாயிகளின் வங்கிக் கணக்கில், 18 ஆயிரம் கோடி ரூபாய் செலுத்தப்படவுள்ளது.

மேலும், கோவையில் நடைபெறும் தென்னிந்திய இயற்கை விவசாய மாநாட்டிலும் பிரதமர் கலந்து கொள்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஏராளமான விவசாயிகள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இந்த துறையுடன் தொடர்புடைய புதிய கண்டுபிடிப்பாளர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்கவிருப்பதாக தெரிவித்துள்ளார்.

நிலையான, சுற்றுச்சூழலுக்கு உகந்த, ரசாயன பயன்பாடு அல்லாத வேளாண் நடைமுறைகளில் கவனம் செலுத்துவது பாராட்டத்தக்க அம்சம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமரின் வருகையை ஒட்டி, கோவையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, இன்று காலை ஆந்திர மாநிலம், புட்டபர்த்தி செல்லும் பிரதமர், ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் சாய் பாபா நினைவு அஞ்சல்தலை மற்றும் நாணயத்தையும் திரு. நரேந்திர மோடி வெளியிடவுள்ளார்.

>>>>>><<<<<<

சர்தார் வல்லபாய் படேலின் 150-வது பிறந்த நாளையொட்டி, தேசிய அளவிலான பாதயாத்திரை நடத்தப்பட உள்ளதாக, மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாதம் 26-ந் தேதி சர்தார் படேலின் பூர்வீக கிராமமான Karamsad-ல் தொடங்கும் இந்த பாதயாத்திரை, 150 கிலோமீட்டர் தொலைவைக் கடந்து, ஒற்றுமை சிலையை அடுத்த மாதம் 6-ந் தேதி சென்றடையும் என்றார்.

சர்தார்-150 என்ற பெயரில், மாவட்ட அளவில் தற்போது நடத்தப்பட்டு வரும் ஒற்றுமை யாத்திரை, ஒன்றுபட்ட தேசத்திற்கான முக்கிய அம்சமாகத் திகழ்வதாகக் கூறினார்.

தூய்மை, சுதேசி மற்றும் சுயசார்பை வலியுறுத்தி, இதுவரை நடத்தப்பட்ட 842 பாதயாத்திரைகளில் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றிருப்பதாகவும் டாக்டர் மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

இதனிடையே, திருச்சி மை பாரத் கேந்திரா சார்பில் நாளை ஒற்றுமை பேரணி நடைபெறவுள்ளதாக மாவட்ட இளையோர் அலுவலர் திரு. பிரவீன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத் திருவிழாவை ஒட்டி, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 4 ஆயிரத்து 764 சிறப்பு

பேருந்துகள் இயக்கப்படவுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தீபத் திருவிழா ஏற்பாடுகள் குறித்து, திருவண்ணாமலையில் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு-வுடன் இணைந்து ஆய்வு செய்த பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போது இயக்கப்பட்டு வரும் 16 ரயில்களுடன் கூடுதலாக 16 சிறப்பு ரயில்கள் இயக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தீபத் திருவிழாவை காண சுமார் 40 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நகரின் 26 இடங்களில் தீபத் திருவிழாவை காண பெரிய திரை அமைக்கப்படுவதுடன், பாதுகாப்பிற்காக 900 கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மழைக்காலம் என்பதால், ஐ.ஐ.டி வல்லுநர்கள் தீபம் ஏற்றப்படும் மலைப்பகுதியின் உறுதித் தன்மையை ஆய்வு செய்த பிறகே பக்தர்கள் மலையில் ஏறி வழிபட அனுமதிக்கப்படுவார்கள் என்றும் திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

>>>>>><<<<<<

நடப்பு சம்பா பருவத்தில், விவசாயிகளிடமிருந்து தடையின்றி நெல் கொள்முதல் செய்ய ஏதுவாக சாக்கு, தார்பாய் உள்ளிட்ட உபகரணங்களை போதுமான அளவிற்கு இருப்பில் வைத்திருக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உணவுத்துறை அமைச்சர்
திரு. சக்கரபாணி கூறியுள்ளார்.

நெல் கொள்முதல் குறித்து சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், இந்த ஆண்டு அதிக அளவில் நெல் கொள்முதல் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

இதற்காக, சுமார் 4 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையிட்ட நவீன சேமிப்பு கிடங்குகளுடன், தற்காலிக திறந்தவெளி கிடங்குகளை அமைப்பதற்கான பணிகளை போர்க்கால அடிப்படையில் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளிடமிருந்து தாமதமின்றி நெல் கொள்முதல் செய்வதுடன் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை, உடனுக்குடன் அரவை ஆலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சக்கரபாணி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

விவசாயிகளுக்கான தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதப் பதிவில், இயற்கை வேளாண்மைக்கு தனிப்பிரிவு, சொட்டு நீர் பாசன முறையை ஊக்குவிக்க 90 சதவீத மானியம், ஊராட்சி ஒன்றியம் தோறும் தானிய சேமிப்பு கிடங்குகள் அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுவதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பிஎஸ்என்எல் நிறுவனம், தமிழகத்தில் அதன் சேவைகளுக்கான விற்பனை உரிமைக்கான ஏல அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதில் ஆர்வமுள்ள தொழில்முனைவோர் மற்றும் நிறுவனங்கள், அடுத்த மாதம் 4ஆம் தேதிக்குள், தங்களது ஏல விண்ணப்பத்தை அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி தளங்கள் வாயிலாக சமர்ப்பிக்கலாம் என்று தமிழ்நாடு வட்ட தொலைத்தொடர்புத் துறை அறிவித்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்படும் உரிமையாளர்கள், மாநிலத்தின் 15 இடங்களில் சிம் கார்டு விற்பனை, Cellphone Recharge, Post Paid மற்றும் DTH சேவைகளுக்கான கட்டணங்களை வசூல் செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் தொகுதி சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. சி. ராமசாமி, உடல்நலக்குறைவு காரணமாக நேற்று காலமானார்.

அவரது மறைவுக்கு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

சவுதி பட்டத்து இளவரசர் முஹமது பின் சல்மான், வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப்பை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சு நடத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

Al Falah குழுமத்தின் தலைவர் Jawad Ahmed Siddiqui சட்டவிரோத பணப்பரிவர்த்தனை தடுப்பு சட்டத்தின் கீழ், அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தலைநகர் தில்லியில் நிலவும் காற்று மாசு காரணமாக மக்கள் தேவையின்றி வீடுகளை விட்டு வெளியே வருவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் சாரண - சாரணியர் இயக்கத்தின் பொன்விழா நிகழ்ச்சியில் மாநில அமைச்சர்கள் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு. மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

சேலம் மாநகராட்சி பகுதியில் செயல்படும் நகர்ப்புற சுகாதார மையங்களை, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் ஆய்வு செய்தார்.

>>>>>><<<<<<

72வது கூட்டுறவு வார விழாவை ஒட்டி, திருவண்ணாமலையில் பயனாளிகளுக்கு கடனுதவிகளை மாநில அமைச்சர் திரு. எ.வ. வேலு வழங்கினார்.

>>>>>><<<<<<

கடற்படையின் தமிழகம், புதுச்சேரி பிரிவின் சார்பில் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கான SPARSH குறைதீர்ப்பு முகாம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, தாட்கோ சார்பில் விமான நிலையத்தில் பணிபுரிவதற்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக ஆட்சியர் திரு. பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சுரேஷ் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் தொழில்துறை பாதுகாப்பு தலைக்கவசங்கள் குறித்த மானக் மந்தன் கலந்துரையாடல், சென்னையில் நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

வளர்ந்து வரும் இளம் வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா-ஏ அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் ஓமன் அணியை வென்றது.

தோஹாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த ஓமன் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 135 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய இந்தியா-ஏ அணி 17 புள்ளி ஐந்து ஓவரிலேயே 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து, 138 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம். இந்தியா-ஏ அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

>>>>>>END<<<<<<